**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.170/2025</u>**

**<u>நாள் : 01.07.2026</u>**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.மைதிலி | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.சத்தியசீலன் | வயது | : | 27 |
| ஊர் | : | அங்கநாரவலசை | தொழில் | : | |
| வட்டம் | : | மட்றப்பள்ளி | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. சத்தியசீலனின் உடற்கூராய்வு அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. TN 83 M 6429 என்ற இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் – ம.சா.ஆ.3

4. TN 83 M 6429 என்ற இருசக்கர வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.4

5. விபத்தில் இறந்த சத்தியசீலனின் ஓட்டுநர் உரிமம் நகல் – ம.சா.ஆ.5

6. விபத்தில் இறந்த சத்தியசீலனின் வாரிசு சான்றிதழ் நகல் – ம.சா.ஆ.6

7. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.7

8. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் – ம.சா.ஆ.8

9. 2 ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.9

10. 2 மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் – ம.சா.ஆ.10

11. 3 ஆம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.11

<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்த சத்தியசீலன் என்னுடைய கணவர். விபத்தின் போது அவர் ஓட்டி சென்ற TN 83 M 6429 என்ற இருசக்கர வாகனம் என் சித்தப்பா மகனின் வாகனமாகும். பிரமாண வாக்குமூலத்தில் என் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என் கணவரின் நண்பர் அஜித்குமாருக்கு சொந்தமானது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தானது இரவு 8 மணிக்கு நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசாரிடம் என் மாமனார் புகார் கொடுத்தார். புகாரில் என் மகன் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று இடது பக்கத்தில் இருந்த மரத்தின் மீது மோதிவிட்டார் என்று என் மாமனார் புகார் கொடுத்திருப்பது சரியா என்றால் சரிதான். தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். அஜித்குமார் பேராம்பட்டுகிராமத்தை சேர்ந்தவர். அவரது தகப்பனார் பெயர் ரஞ்சித்குமார். என்னுடைய கணவரின் ஊர் அங்கநாரவலசை. அஜித்குமாரும், என் கணவரும் இரண்டு வருடம் நண்பர்கள். நண்பர் என்ற முறையில் என் கணவர் அந்த வாகனத்தை எடுத்து சென்றார். என் கணவர் மேஸ்திரி வேலை செய்துவந்தார். அவருக்கு அடையாள அட்டை உள்ளதா என்றால் இல்லை. அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும் மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்திற்கு என் கணவர் மூன்றாம் தரப்பினர் இல்லை என்றும், அந்த வாகனத்திற்கு அவர் உரிமையாளரும் இல்லை, என் கணவருக்காக எந்த ஒரு தொகையும் பாலிசியில் செலுத்தப்படவில்லை என்றும் விபத்தானது என் கணவரின் வேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதால் 2 ஆம்

எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க முடியாது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.